சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம்-கல்வி விடுதிகள்- 2006-2007 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 14 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.34.06 இலட்சம் செலவினத்தில் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு ஒப்பபளிக்கப்படுகிறது -ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசு ஆணை (நிலை) எண்.119
நாள்.15.9.2006

படிக்கப்பட்டது:-

1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்./P2/Pdl.10/06, நாள் 25.5.06 மற்றும் நாள். 12.6.06.

---

ஆணை:-

ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் 1178 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் 945 விடுதிகள் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் தற்போது 136 விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கான முன்மொழிவுகள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரிடமிருந்து வரப் பெற்றுள்ளன என்று தெரிவித்து அதில் 14 மாணவியர் விடுதிகளுக்கு 2006-2007 பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.34.06 இலட்சம் செலவினத்தில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கான செயற்குறிப்பினை ஆதிதிராவிட நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். மேலும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் சுற்றுச் சுவர் கட்டுவதால் வெளியாட்களிடமிருந்து அரசு உடைமைகளுக்கு பாதுகாப்பு ஏற்படுவதுடன் மழை மற்றும் குளிர் காலங்களில் பொது மக்கள் விடுதிக் கட்டிடத்தில் தங்கள் விருப்பம் போல் பயன்படுத்துவதையும் மாணவ, மாணவியர்களுக்கு இன்னல்கள் விளைவிப்பதையும் தவிர்க்கலாம் என்றும் தனது செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்து, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 14 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு 2006-2007-ம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் சுற்றுச்சுவர் கட்டித் தருவதற்காக ரூ.34.06 இலட்சம்

செலவினத்திற்கு (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து ஆறு ஆயிரம் மட்டும்) அரசு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று 14 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுவது தொடர்பாக மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் 14 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு செலவிடப்படும் தொகை ரூ.34.06 இலட்சத்திற்கு மிகாமல் இருக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

4. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த-மூலதன செலவு 01 ஆதிதிராவிடர் நலன்-277-கல்வி- ஐந்தாண்டு திட்டங்கள்-ஐஐ மாநில திட்டம் துஹ ஆதிதிராவிடர் நல மாணவரில்லங்கள் கட்டுதல் - 16 பெரும்பணிகள்"

(த.தொ.கு.எண்.4225 01 277 JA 1603)

5. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பயன் படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றினை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.53481/SW/06, நாள்.4.9.06-ல்ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பு.ஏ. இராமையா,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/35/6
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை 5/35/1
அனைத்து மாவட்ட ஆட்சியர்
அனைத்து மாவட்ட கரூவூல அலுவலர்.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை101.

நகல்:-

நிதித்(ச.ந) துறை/ நிதித் (வ.செ.பொஐஐ)துறைசென்னை-9
அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

சென்னை-9
ஆதிதிராவிடர் (ம)பழங்குடியினர் நலத்
(அநமு1/ஆதிந7/ஆதிந9)துறை
சென்னை-9
உதிரி/இருப்புக் கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

(அரசாணை (நிலை )எண்.119ஆதி(ம)பந(ஆதிந4) துறை, நாள். 15.9.06-ன் இணைப்பு )

இணைப்பு

சுற்றுக்சுவர் கட்டித் தரப்பட உள்ள 14 ஆதிதிராவிட நல மாணவியர் விடுதிகள் பற்றிய விவரம் பின் வருமாறு:-

| வ.எ | விடுதியின்பெயர்மற்றும் மாவட்டம் | மாணவிகளின்எண்ணிக்கை | தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | தென்காசிமாணவியர்விடுதி, திருநெல்வேலி | 60 | 3.00 |
| 2. | ஆழ்வார் திருநகரி மாணவியர் விடுதிதூத்துகுடி மாவட்டம் | 55 | 3.60 |
| 3. | கொரடச்சேரி மாணவியர்விடுதி திருவாரூர் மாவட்டம் | 55 | 0.96 |
| 4. | திருப்பத்தூர் மாணவியர்விடுதி சிவகங்கை மாவட்டம் | 25 | 3.00 |
| 5. | பேராவூரணி மாணவியர்விடுதி தஞ்சாவூர் மாவட்டம் | 135 | 1.50 |
| 6. | ஊத்தன்கரை மாணவியர்விடுதி கிருஷ்ணகிரி மாவட்டம் | 85 | 3.00 |
| 7. | பொள்ளாச்சி மாணவியர்விடுதி கோயம்புத்தூர் மாவட்டம் | 50 | 0.75 |
| 8. | அவினாசி மாணவியர்விடுதி கோயம்புத்தூர் மாவட்டம் | 50 | 0.50 |
| 9. | கோவிந்தபாடி மாணவியர்விடுதி கோயம்புத்தூர் மாவட்டம் | 50 | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கொடைக்கானல் மாணவியர்விடுதி திண்டுக்கல் மாவட்டம் | 50 | 4.00 |
| 11. | கோபிசெட்டிபாளையம் மாணவியர்விடுதி ஈரோடு மாவட்டம் | 50 | 3.00 |
| 12. | தரங்கம்பாடி மாணவியர்விடுதி கரூர் மாவட்டம் | 50 | 4.00 |
| 13. | சுசிந்திரம் மாணவியர்விடுதி கன்னியாகுமரி மாவட்டம் | 50 | 0.75 |
| 14. | நம்பியூர் மாணவியர்விடுதி ஈரோடு மாவட்டம் | 50 | 4.00 |
| ஜ்ஜ் | மொத்தம் | 815 | 34.06 |

(ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து ஆறு ஆயிரம் மட்டும்)

பு.ஏ. இராமையா,
அரசுச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.